OS No.68/2019 Dated: 29.8.2022

**வா.சா.2 சிங்காரவேலு மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் என்னை அழைத்துக் கொண்டுசென்று 29.8.2018 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு வாதியை அறிமுகப்படுத்தியதிலிருந்து தான் அவரை எனக்கு தெரியும். வீரமுண்டான்குடிக்காட்டில் வைத்து என்னை அறிமுகப்படுத்தினார்கள். என் ஊரான குருங்குளத்திலிருந்து வீரமுண்டான்குடிக்காடு சுமார் 10 கி.மீ கிழக்கே உள்ளது. காலை 9.00 மணிக்கு எங்கள் ஊரிலிருந்து கிளம்பினேன். ஒரு பத்தரை மணிக்கு அவர்கள் வீட்டிற்கு போனேன். பிரதிவாதிகள் இருவரும் அவர்களுடைய வண்டியில் வந்தார்கள். நான் என்னுடைய சூப்பர் எக்ஸ்.எல்.ல் போனேன். பிரதிவாதிகள் வந்த வண்டியின் பெயரோ, எண்ணோ தெரியாது. அது பெரிய வண்டி. சுமார் 11.30 வரை வீரமுண்டான்குடிக்காட்டில் இருந்தோம். வீரமுண்டான்குடிக்காட்டில் வாதியை பார்த்தோம். அப்போது தான் அவரை முதன்முதலாக பார்த்தேன். அதற்கு முன்பு அவருடைய குடும்பத்தைப் பற்றியோ, வரவு செலவுகள் பற்றியோ எனக்கு தெரியாது. வாதியை பார்ப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு என்னை கூப்பிட்டார்கள். வாதியிடம் பிரதிவாதிகள் எவ்வளவு தொகை கடன் கேட்டார்கள் என்றோ, எப்போது கேட்டார்கள் என்றோ எனக்கு தெரியாது. வாதி எவ்வளவு ரூபாய் தர ஒப்புக் கொண்டார் என்று எனக்கு தெரியாது. பணம் கொடுக்கும்போது 29.8.2018 ஆம் தேதி மாலை 4.00 மணியிருக்கும். மூக்கப்பஉடையான்பள்ளத்திற்கு நான் போகும்போது வாதி முருகேசன், வைரவேலு, ராஜா ஆகியோர் இருந்தார்கள். வீரமுண்டான்குடிக்காட்டிற்கும், மூக்கப்பஉடையான்பள்ளத்திற்கும் 15 கி.மீ தூரம் இருக்கும். வீரமுண்டான்குடிக்காட்டிலிருந்து 12.00 மணிக்கு கிளம்பி குருங்குளம் வந்துவிட்டோம். வாதி நாங்கள் கிளம்புவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பு கிளம்பிவிட்டார். வாதி புரோ நோட்டு எழுதுவதற்கும் சாட்சி கையொப்பம் போடுவதற்கும் ஆளில்லை. மூக்கப்பஉடையான்பள்ளத்திற்கு வந்துவிடுங்கள் என்று சொன்னார். மூக்கப்பஉடையான்பள்ளத்திற்கு நாங்கள் போனபோது வைரவேலுவும், ராஜாவும் இருந்தார்கள். அவர்கள் எப்படி அங்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வைரவேலுவிற்கு சுமார் 25, 26 வயதிருக்கும். வைரவேலு சுமார் 5

அடி இருப்பார். கருப்பாக இருப்பார். ராஜா கட்டையாக, சிவப்பாக இருப்பார். 50 வயதிற்கு மேலிருக்கும். வைரவேலு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. ராஜா முதுகுளத்தைச் சேர்ந்தவர். முதுகுளம் கிராமத்தில் என் மகனுக்கு பெண் எடுத்திருக்கிறேன். என் மருமகளும், சாட்சி ராஜாவும் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள். ஒரே சமூகம். பிரதிவாதிகள் எதற்காக கடன் வாங்கினார்கள் என தெரியாது. அந்த தொகையில் பிரதிவாதிகள் என்ன செலவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதற்கும் ஒரு வருடத்திற்கு முன்பு 2 ஆம் பிரதிவாதி சொத்து கிரயம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதிக்கு அவரது தந்தை இனாமாக சொத்து எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. 29.8.2018 க்கு முன்பு பிரதிவாதிகள் என்னை எந்த பத்திரத்திற்கோ, கடன் வாங்குவதற்கோ சாட்சியாக கையொப்பம் செய்யும்படி கேட்கவில்லை. வேறுயாருக்கும் இதுபோல் புரோநோட்டில் சாட்சிக் கையொப்பம் போட்டதில்லை. பிரதிவாதிக்கு 3 இடங்களில் கொல்லை உள்ளது. ஆனால் அவற்றின் விஸ்தீரணம் தெரியாது. மாலை 4.00 மணிக்கு முன்னரே பிரதிவாதிகளுக்கு வாதி பணத்தை கொடுத்துவிட்டார். புரோநோட்டு எழுத ஆரம்பிக்கும்போது மணி மதியம் 3.15 இருக்கும். முத்திரை வில்லை ஆவணத்தின் மேலும் கீழுமாக ஒட்டியிருந்தார்கள். எத்தனை ரூபாய் ஸ்டாம்ப் என்று எனக்கு தெரியாது. கோவிந்தராஜ் நான் கையெழுத்து போடுவதற்கு முன்பே கையெழுத்து போட்டார். வைரவேலு கையெழுத்தை கடைசியில் போட்டார். என்ன காரணத்திற்காக கடன் கொடுக்கப்பட்டது என்று புரோநோட்டில் எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. நான் படித்துப் பார்க்கவில்லை. பிரதிவாதிகள் தான் புரோநோட்டில் கையெழுத்து போடச்சொன்னார்கள். கொடுத்த நோட்டுகளை நான் எண்ணிப் பார்க்கவில்லை. இரண்டாயிரம் ரூபாய் நோட்டு மற்றும் ஐநூறு ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார்கள். எத்தனை இரண்டாயிரம் ரூபாய் நோட்டு எத்தனை ஐநூறு ரூபாய் நோட்டு என்று எனக்கு தெரியாது. என்ன ஆவணங்கள் அந்த சமயத்தில் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. புரோநோட்டு பச்சை பேப்பரில் எழுதினார்கள். புரோநோட்டு ஒரு பேப்பரில் ஒரு பக்கம் மட்டும் எழுதினார்கள். மையின் நிறம் தெரியாது. மூக்கப்பஉடையான்பள்ளத்திற்கு நான் ஏற்கனவே சென்றதில்லை. மூக்கப்பஉடையான் பள்ளத்தில் வாதி தெற்கு பார்த்த மாடி வீட்டில் உள்ளார். வாதி எங்கிருந்து பணம் எடுத்தார் என்று எனக்கு தெரியாது.

அவரது வீட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தார். 29.8.2018 ஆம் தேதிக்கு எனக்கு தமிழ், மாதம், தேதி தெரியாது. என்னுடைய பிறந்த தேதி, கல்யாண தேதி, ஆதார் அட்டை எண், குடும்ப அட்டை எண் தெரியாது. என்னுடைய மகனின் கல்யாண தேதி தெரியாது. புரோநோட்டில் வைரவேலு மட்டும் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டார். மற்றவர்கள் தமிழில் போட்டார்கள். புரோநோட்டு எழுதப்பட்ட பேப்பர், பேனா ஆகியவற்றை பிரதிவாதிகள் தான் எடுத்துவந்தார்கள். மூக்கப்பஉடையான் பள்ளத்திற்கு சென்றபின் 10 நிமிடங்கள் கழித்து புரோநோட்டு எழுத ஆரம்பித்தார்கள். பிரதிவாதிகள் தற்போது எங்கு குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. 6 மாதங்களுக்கு முன்பு பிரதிவாதிகள் எங்கள் ஊரை விட்டுப் போனார்கள். பிரதிவாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக நான், வாதி, பக்குமணி, ராஜா, வைரவேலு எல்லோரும் சேர்ந்து மோசடியாக புரோநோட்டு தயாரித்தோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தை பொறுத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி உத்தரவு பெறுவதற்காக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பை என் மகனை வைத்து பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும் எனக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் என்று சொன்னால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 29.8.2018 ஆம் தேதியன்று என் முன்னிலையிலோ, தனியாகவோ வாதியிடம் ரூ.12,00,000/- கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என் முன்னிலையிலோ, வைரவேலு, ராஜா முன்னிலையிலோ புரோநோட்டு எழுதித்தரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் மொத்த சொத்துமே ரூ.7,00,000/- அல்லது ரூ.8,00,000/- தான் வரும் என்றும், அதைநம்பி யாரும் இவ்வளவு தொகை கடன் தரமாட்டார்கள் என்றால் சரியல்ல. நான், வைரவேலு, ராஜா, வாதி ஆகியோர் பக்குமணியின் கையாளாக இருந்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் உள்ள முன்விரோதம் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓ.ம். அ. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.